நாடகச் சிகிச்சை முறையை அரங்கிற்கு அறிமுகம் செய்த

# திருமதி கோகிலா மகேந்திரன்

- தெளிவத்தை ஜோசப் -

ஆழத்து முத்துக்கள் 87

பல்கலைக்கழகத்தில் படித்துக் கொடிருந்த போதே உளவளத் துறையில் அதிக தேடலையும், அரிய ஆங்கில நூல்கள் வாசிப்பினையும் ஒரு ஆர்வத்துடன் மேற்கொண்டார். திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்.

ஆங்கில உளவியல் நூல்களின் வாசிப்பு உளவியல் தேடலை விரிவாக்கிக் கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. உளவியற்கல்வியை முறையாகக் கற்றுத் தேர்ந்து உளவியல் ஆலோசகரானார். (1993) பேராசிரியர் டி.ஜே. சோமசுந்தரம் அவர்களின் வழிகாட்டலுடன் சாந்திகத்தில் பல உளவளத் துணை அணியினருக்கு பயிற்சியாளராகப் பணியாற்றியவர்.

ஓவியச் சிகிச்சை முறையைக் கற்றுள்ள இவர் மான்செஸ்டர் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஜேம்ஸ் தொம்சனிடம் மந்திரக்கடை (Magic Shop) என்கின்ற நாடக சகிச்சை முறையையும், இத்தாலியில் மனவடுவுக்குரிய சிகிச்சை முறையையும் கற்றுள்ளார்.

அரங்கியல் ஆர்வமும் அனுபவமும் மிக்கவரான திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள், போர்ச்சூழலில் வாழுகின்ற, போரினால் பாதிக்கப்பட்ட உளத்தாக்கத்துக்கு உள்ளான பெரியவர்கள், பெண்கள், பிள்ளைகள் ஆகியோருக்கு மந்திரக்கடை என்கின்ற நாடகச் சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தி வந்துள்ளார். இவரிடம் பயிற்சி பெற்ற உளவளத்துறையினருக்கும் அரங்கியற் கலைகளைப் பயன்படுத்திக் குணமடையச் செய்யும் முறைகளைப் பயிற்றுவித்துள்ளார்.

நாடகச் சிகிச்சையில் உளமறிநாடகம், அரங்கக் கலந்துரையாடல், படிம அரங்கு, மெஜிக் பொக்ஸ் போன்றவற்றையும் பயிற்றுவித்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பிரிவில் கற்று விஞ்ஞானப் பட்டதாரியாக வெளியேறி, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இணைந்து பயிற்சி பெற்று பொலிகண்டி தமிழ்க்கலவன் பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியையாகப் பதவி ஏற்றார்.

கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாசாலை, மகாஜனக்கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியப்பணியாற்றி தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் அதிபராகப் பதவியேற்றார்.

மகஜனக்கல்லூரியின் மாணவியாக இருந்த போதே கல்லூரி மேடையேற்றிய 'கோமகளும் குருமகளும்' என்னும் நாடகத்தில் பிரதான பாத்திரமேற்று நடித்து சிறந்த நடிகைக்கான பரிசையும் பெற்றுக் கொண்டார்.

பல்கலைக்கழகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய நாடக டிப்ளோமா பயிற்சி நெறியில் இணைந்து பேராசிரியர்காளன சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி, மௌனகுரு, திரு.வி.வி.வைரமுத்து, குழந்தை ம.சண்முகலிங்கம் போன்றோரிடம் நாடகம் பயின்றிருக்கின்றார்.

ஆசிரியராக இருந்த காலங்களில் அவ்வக் கல்லூரிகளின் இல்ல நாடகப் போட்டிகளில் இவர் எழுதி, நடித்து, மேடையேற்றிய பல நாடகங்கள் இவரது அரங்கியல் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளன. நடிகையாக, நாடகாசிரியராக, நெறியாளராக பயிற்சியாளராக அரங்கியலின் பல்பரிமாணங்களிலும் பிரகாசித்தவர் கோகிலா அவர்கள்.

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் செயலாளராக எண்பதுகளில் பணியாற்றிய போதும் சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் தலைவராகச் செயலாற்றிய போதும் நாடகமே முச்சாகப் பணியாற்றி மாணவர்களின் அரங்கயீர்ப்புப் பணிகளை முன்னெடுத்



தவர் இவர்.

மகாஜனக்கல்லூரி மேடையேற்றிய 'பட்டங்கள் மீண்டும் பறக்கும்' மற்றும் 'மீண்டும் நிலவு பொழியும்' 'மலையும் மடற்பனையும்' 'ஆசிரியவாண்மை' ஆகிய நாடகங்கள் ஆசிரியர்தின விழாவுக்காக வெவ்வேறு கால கட்டங்களில் மேடை ஏற்றப்பட்டவை.

தேசிய கல்வி நிறுவனத்தின் முரண்பாட்டுத் தீர்வு என்னும் தொனிப் பொருள் செயலமர்வுக்காக செய்யப்பட்ட நாடகம் 'முரண்பாடுகள்' (1997).

இணுவில் மத்திய கல்லூரி 'பாலாய் நிலவு பொழியும்' என்னும் கோகிலாவின் கவிதை நாடகத்தை மேடையேற்றியது (1999).

வட இலங்கை சங்கீதசபையின் ஆசிரியர் தேர்வுக்காகப் 'பௌர்ணமி நாள்' என்னும் நாடகத்தை எழுதி, நெறியாள்கை செய்து பிரதான பாத்திரத்தில் நடித்து அச்சபையின் நாடகமும் அரங்கியலும் என்னும் பாடத்திட்டத்தில் ஆசிரியர் மட்டத்தேர்வில் வெற்றியீட்டி சங்கீதசபாவின் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் வாய்ப்பினையும் பெற்றுக் கொண்டார்.(1992)

யாழ். பல்கலைக்கழகத்தின் 'நாடகமும் அரங்கியலும்' பாடத்துக்கான வருகைதரு விரிவுரையாளராக இரண்டு வருடம் பணியாற்றியுள்ளார்.

இவருடைய எட்டு நாடகங்களை உள்ளடக்கிய தொகுதி ஒன்று 'குயில்கள்' என்னும் பெயரில் 2001ல் நூலுருவாகியது. 2005ல் மறுப்பதிப்பும் பெற்றுள்ளது.

'கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு' என்னும் நூல் 1997லும் 'அரங்கக்கலையில் ஐம்பதாண்டு' என்னும் கலையரசு ஏ.டி.பொன்னுத்துரையின் அரங்கியல் வாழ்வு பற்றிய நூல் 2003லும் வெளிவந்துள்ளன.

அரங்கியலுக்கு அப்பால் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் ஈழத்தின் தரமான சிறுகதையாளர்களில் முன்வரிசைக்காரர்.

1972ல் சிறுகதை எழுத ஆரம்பித்தவர்.

ஆறு சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

இரண்டு தடவை (1986 / 1997) சிறந்த சிறுகதை நூலுக்கான சாகித்திய விருது பெற்றுள்ளார்.

இரண்டு நாவல்களும் எழுதியுள்ளார்.

துயிலும் ஒருநாள் கலையும் - 1986

தூவானம் கவனம் - 1989

கல்வித்துறையில் ஒரு விஞ்ஞான ஆசிரியராக ஆரம்பித்து, அதிபராக உயர்ந்து, பிரதிக் கல்விபணிப்பாளராக உயர்பதவி வகித்தவர்.

தன்னுடைய அர்ப்பணிப்புமிக்க ஆசிரியத்துவத்துக்காக இரண்டுமுறை 'நல்லாசான்' விருது பெற்றிருக்கின்றார்.

சிறுகதை, நாவல், நாடகம், உளவியல் ஆகிய துறைகளில் பன்னிரண்டு நூல்களை வெளியிட்டிருக்கும் கோகிலா பிறந்த ஊர் விழிசிட்டி. பிறந்த நாள் 17.11.1950. பெற்றோரிட்ட பெயர் கோகிலாதேவி. இவருடைய எழுத்துலக நாடக உலக வெற்றிகளுக்குத் தோள் கொடுப்பவர் இவருடைய கணவர் மகேந்திரராஜா அவர்கள். ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றிவர். திருமணத்தின்பின் கோகிலாதேவி கோகிலா மகேந்திரன் ஆனார்.

அந்தப் பெயரே நிலைத்து விட்டது. கோகிலா மகேந்திரன் அவர்களுடைய புதல்வர் பிரவீணன். ஒரு கவிஞனாகக் கவனம் பெறுகின்றவர். அம்மாவின் சமூகச் செயற்பாடுகளுக்கு உற்றதோர் துணையாக இருப்பவர் பிரவீணன்.



theliwathai.joseph@thaiveedu.com

உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

Thaiveedu
Woodside Square, P.O.Box #63581
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Fax : 416.849.0594
E-mail : info@thaiveedu.com